செய்தி வெளியீடு365 நாள்.21.1.2008

# 27 தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமை! ஒரு கோடியே 65 இலட்ச ரூபாய் பரிவுத் தொகை! முதலமைச்சர் கலைஞர் ஆணை

தமிழக சட்டப்பேரவையில் 20.3.2008 அன்று அளிக்கப்பட்ட இவ்வாண்டின் நிதிநிலை அறிக்கையில், "தொண்டால் பொழுதளந்த தூய தமிழ்ச்சான்றோர்களின் கருத்துகளும் சிந்தனைகளும், வளரும் தலைமுறைக்கு மட்டுமன்றி வரும் தலைமுறைகளுக்கும் பயனளிக்கத்தக்க வகையில், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழக அரசால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வகையில் இதுவரை 67 தமிழறிஞர்களின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, இந்தமுறை ஆட்சிப் பொறுப்பேற்ற பின், பரிதிமாற்கலைஞர், புலவர் குழந்தை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. முதலாக 37 தமிழறிஞர்களின் நூல்கள் இதுவரை நாட்டுடைமையாக்கப்பட்டு, பரிவுத் தொகையாக 3 கோடியே 9 இலட்சம் ரூபாய் அவர்களின் மரபுரிமையர்க்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது" என எடுத்துரைக்கப்பட்டு இந்த ஆண்டு, கவிஞர் பெரியசாமித் தூரன், பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் உள்ளிட்ட 27 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை, அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில், அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, கவிஞர் பெரியசாமித் தூரன், பேராசிரியர் க.வெள்ளைவாரணனார், பண்டிதர் க.அயோத்திதாசர், திரு.ஆபிரகாம் பண்டிதர், திரு.சதாவதானி செய்குத்தம்பி பாவலர், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை ஆகிய அறிஞர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு, இச்சான்றோர்களின் மரபுரிமையர்களுக்கு தலா பத்து இலட்சம் ரூபாய் வீதம் பரிவுத் தொகை வழங்கப்படும் என்றும்;

மகாவித்வான் ரா.ராகவையங்கார், திரு.உடுமலை நாராயண கவி, திரு.கு.மு.அண்ணல் தங்கோ, திரு.அவ்வை தி.க.சண்முகம், திரு.விந்தன், திரு.லா.ச.ராமாமிர்தம், திரு.வல்லிக்கண்ணன், திரு.நா.வானமாமலை, கவிஞர் புதுவைச் சிவம், திரு.அ.இராகவன், திரு.தொ.மு.சி.ரகுநாதன், திரு.சக்திதாசன் சுப்பிரமணியன், டாக்டர் ந.சஞ்சீவி, திரு.முல்லை முத்தையா, கவிஞர் எஸ்.டி.சுந்தரம், கவிஞர் மீரா, பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார், புலவர் முகமது நயினார் மரைக்காயர், திரு.சு.சமுத்திரம், திரு.கோவை இளஞ்சேரன், பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு, இச்சான்றோர்களின் மரபுரிமையர்களுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் பரிவுத் தொகை வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கலைஞர் இன்று (21.5.2008) ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் பயனாக, நாட்டுடைமையாக்கப்படும் படைப்புகளை அளித்துள்ள 27 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு மொத்தம் ஒரு கோடியே 65 இலட்ச ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,சென்னை–9**

‘’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’*****